## முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

## O.S.No. 163/2022

தேதி : 06-03-2025

(வா.சா.1) – திரு. திருமலைசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் வடபருத்தியூர். பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் தற்போது எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாது. ஆனால் என்னிடம் பணம் வாங்கும் சமயத்தில் தாராபுத்தில் குடியிருந்தார். தாராபுரத்தில் எங்கு குடியிருந்தார் என்றால் பேருந்து நிலையம் தென்புறம் குடியிருந்தார். பிராதில் தாராபுரம் முகவரி தான் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை மேல்கரைப்பட்டி கொடுத்திருக்கிறேன். புரோ நோட்டில் தாராபுரம் முகவரி கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை மேல்கரைபட்டி முகவரியை கொடுத்திருக்கிறேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் பைனானசில் பங்குதாராராக இருக்கிறேன். முகில் ஆட்டோ பைானஸ் என்று சொன்னால் சரியா என்றால் ஆமாம். எத்ததை ஆண்டுகளாக அது உள்ளது என்றால் சுமார் 10 ஆண்டுகளாக. கடந்த 6 மாதங்களாக இல்லை. அந்த பைனாசில் எத்தனை பங்குதாரர்கள் என்றால் 10 .

2. திருவாடன் என்பவரும் ஒரு பங்குதாரார் என்றால் ஆமாம். வாகனங்களுக்கு கடன் கொடுப்பதற்காக அந்த பைனான்ஸ் உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதியும் அந்த பைனான்சில் கடன் வாங்கியிருந்தார் என்றால் ஆமாம். எத்ததை ஆண்டுகளுக்கு முன்பு கடன் வாங்கியிருந்தார் என்றால் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஆனால் அதை செலுத்திவிட்டார். சாட்சியிடம் ரசீதுகள் காண்பிக்கப்பட்டு அது பிரதிவாதி வாங்கிய வண்டி கடனை செலுத்தியதற்கான ரசீதுகள் என்று கேட்ட போது ஒப்புக்கொண்டார். அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுகிறது. முழுத்தொகையும் செலுத்திய பின்னர் அவரிடம் பெற்றிருந்த ஆவணங்களை திரும்ப செலுத்தி விட்டோம் என்றால் சரிதான். சாட்சியிடம் பிராமிசரி நோட்கள், காசோலைகள் காண்பிக்ககப்பட்டு அதுதான் அவர் திருப்பி கொடுத்ததா என்று

கேட்டபோது ஒப்புக்கொண்டார். பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருவாடன் என்பவர் முத்துரத்தினம் என்பவர் வாங்கிய கடனுக்காக பிரதிவாதி பவர் ஏஜெண்ட் மூலம் சொத்துக்களை அவர் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் ஆமாம்.

3. அந்த கிரைய பத்திரம் 16.10.2020 என்றால் சரிதான். அது 2739/2020 ஆவணமாக பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் நானும் ஒரு சாட்சி என்றால் சரிதான். புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகள் யார் என்றால் செல்லமுத்து, வஞ்சிமுத்து. அந்த புரோநோட்டை யார் எழுதினார் என்றால் செல்லமுத்து. மேற்படி இருவரும் எப்படி பழக்கம் என்றால் செல்லமுத்து என் தங்கையின் கணவர், வஞ்சிமுத்து என்பவர் செல்லமுத்துவுடன் வந்தவர், அவர் நண்பர். வஞ்சிமுத்து எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ள கடன் எந்த தேதியில் பதியப்பட்டது என்றால் 10.04.2021.

4. புரோநோட்டில் சொல்லியுள்ள சாட்சிகளின் பெயர்களை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புரோநோட்டை யார் கொண்டுவந்தது என்றால் பிரதிவாதி. எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எங்கள் தோட்டத்தில் உள்ள வீட்டில் வைத்து எழுதப்பட்டது. அச்சமயத்தில் என் வீட்டார்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்களுக்கும் பணம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். புரோநோட்டில் என் மனைவி சாட்சி கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் இல்லை. கடனை திரும்ப செலுத்தாதது சம்பந்தமாக 3ம் நபரிடம் பேச்சுவார்த்தை நடந்ததா என்றால் இல்லை, நேரடியாக பேசினோம். நான் வருமான வரி செலுத்துபவர் என்றால் சரிதான்.

5. ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ஒரு நபருக்கு தொகை கொடுக்கவேண்டும் என்றால் காசோலை மூலம்தான் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். அதேபோல் ரூ.2லட்சத்திற்கு மேல் ஒருவருக்கு பணம்கொடுக்கவேண்டும் என்றால் வங்கிமூலம்தான் கொடுக்கவேண்டும் என்றால் இல்லை, வங்கியிலிருந்ததான் எடுத்து கொடுத்தேன். வங்கியிலிருந்து எவ்வளவு, எப்போது எடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. கூட்டுறவு வங்கியில் லோன் போட்டிருந்தேன் என்றால் ஆமாம். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகள்

கையெழுத்து போட யார் அழைத்தார் என்றால் அவர்கள் இருவரும் வேறு வேலையாக என் வீட்டிற்கு வந்திருந்தார்கள். சாட்சிகள் எந்த நேரத்தில் வந்தார்கள் என்றால் காலை சுமார் 10 மணியளவில். பிரதிவாதி எப்போது வந்தார் என்றால் மேற்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது வந்தார்.

6. ஏற்கனவே பிரதிவாதி பைனான்சில் பெற்றிருந்த கடனை திருப்பி செலுத்திய பின்னரும் முழுமையாக ஆவணங்களை அவருக்கு திருப்பி கொடுக்காமல் வைத்திருந்த புரேநோட்டை வைத்து இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எங்கள் பைனான்சில் நிறுவனத்தில் நிரப்பப்படாத புரோநோட் பெற்றுக்கொண்டு கடன் வழங்குவது வழக்கம் என்றும், அப்படி பெற்றுக்கொண்ட நிரப்பப்படாத புரோநோட்டை வைத்து பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து பிரதிவாதி எந்தவொரு தொகையும் பெறவில்லை மற்றும் புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. உண்மையில் நிரப்பப்படாத புரோநோட் என்பதால்தான் வழக்கில் சாட்சிகள் பெயரை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே காரணத்தினால் தான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் சாட்சிகள் பெயரை சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டை தவிர வேறு ஆவணங்கள் வாங்கினேனா என்றால் இல்லை. பிரதிவாதி பெயரில் சொத்துகள் பற்றிய விபரம் தெரியுமா என்றால் இல்லை, தோட்டம் இருப்பதாக சொன்னார். பிரதிவாதி சொத்தை ஜப்தி செய்வதற்கு மனு செய்துள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதிசொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் ஒரு ஒப்பந்தம் பற்றி சொல்லியுள்ளேன் என்றும், அது என்ன என்றால் சாட்சி அதை வாசித்து பார்த்த பின்னரும் தெரியாது என்று சொன்னார். தாவா புரோநோட் ஒரு மோசடியான புரோநோட் என்றும், நண்பர் மறற்றும் உறவினர்களை வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம். K. ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.